பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# நீலகிரி இருளர் இனமக்களின் வாழ்வியல் மாற்றங்கள் - சமகாலப் பார்வை

**எஃப். இமாக்குலேட்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641014.
மின்னஞ்சல் முகவரி: immaculate291@gmail.com
நெறியாளர்: **முனைவர் இராம பரிமளம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641014. மின்னஞ்சல் முகவரி: parimalam@psgcas.ac.in

**ஆய்வுச் சுருக்கம்**

நீலகிரி மாவட்டத்தில் வாழும் இருளர் இனமக்கள், தமிழ்நாட்டின் தொன்மையான பழங்குடியினச் சமூகங்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கை முறை, மரபுவழி மருத்துவ அறிவு, தனித்துவமான பண்பாட்டு மரபுகள் மற்றும் சமூகக் கட்டமைப்பு ஆகியவை இவர்களின் வாழ்வியலின் அடிப்படைக் கூறுகளாகும். இருப்பினும், நவீனமயமாக்கல், நகரமயமாக்கல், கல்வி வளர்ச்சி, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பொருளாதார மாற்றங்கள் ஆகியவை இவர்களின் பாரம்பரிய வாழ்வியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாய்வு, நீலகிரி இருளர் இனமக்களின் சமகால வாழ்வியலில் ஏற்பட்டுள்ள சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, பாரம்பரியத் தொழில்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், குடியிருப்பு, உடை, குடும்ப அமைப்பு மற்றும் மூலிகை மருத்துவம் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வாய்வில் ஆராயப்படுகின்றன. மேலும், இம்மாற்றங்களுக்குக் காரணமான சமூக மற்றும் பொருளாதாரச் சூழல்களும், அவை இருளர் இன மக்களின் பண்பாட்டு அடையாளங்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும் இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. நவீன மாற்றங்களால் இருளர் இனமக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறியிருந்தாலும் அவற்றால் அவர்களின் பண்பாட்டு மரபுகள் மற்றும் இயற்கை சார்ந்த வாழ்வியல் கூறுகள் படிப்படியாகச் சிதைந்து வருவதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. எனவே, அவர்களின் சமூக முன்னேற்றம் மற்றும் பண்பாட்டு அடையாளம் ஆகிய இரண்டும் சமநிலையுடன் இருப்பது அவசியம் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

**திறவுச்சொற்கள்:** நீலகிரி, பழங்குடியினர், இருளர், வாழ்வியல் மாற்றங்கள், பண்பாடு, மூலிகை மருத்துவம், நவீனமயமாக்கல்.

## முன் ரை

இன்றைய நவீன மனித சமூகம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் நகரமயமாக்கலின் உச்சத்தை அடைந்த நிலையில், மனிதன் இயற்கையுடன் இணைந்து வாழ்வதற்குப் பதிலாக, இயற்கை வளங்களைத் தனது தேவைகளுக்காகச் சுரண்டும் போக்கு அதிகரித்துள்ளது. இச்சூழ்நிலையில் பழங்குடியின மக்களின் வாழ்வியல் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டதாக அமைகின்றது.. இயற்கையை வெறும் வளமாக மட்டுமல்லாது, வாழ்வின் ஆதாரமாகவும், பண்பாட்டு அடையாளமாகவும் இவர்கள் கருதுகின்றனர். பழங்குடியின மக்களின் வாழ்வியல், மரபுசார் அறிவு, நம்பிக்கைகள், தொழில்கள் மற்றும் சமூக உறவுகள் அனைத்தும் இயற்கையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய பழங்குடியினச் சமூகங்களுள், நீலகிரி மாவட்டத்தில் வாழும் இருளர் இனமக்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இருளர் இனமக்களின் வாழ்வியல் இயற்கையைச் சார்ந்ததாக அமைந்திருந்தாலும் தற்போது நகரமயமாக்கல், அறிவியல் மற்றும்

தொழில்நுட்ப முன்னேற்றம், கல்வி விரிவாக்கம், சமூக பொருளாதார மாற்றங்களினால் இவர்களின் வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இம்மாற்றங்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**நீலகிரி மாவட்டத்தின் பழங்குடியினச் சமூகங்கள்:**

நீலகிரி 'தமிழ்நாட்டின் பழங்குடியினர் மாவட்டம்' என்று அழைக்கப்படுகிறது. இங்கு தோடர், கோத்தர், இருளர், குறும்பர், பனியர், காட்டுநாயக்கர், என்னும் ஆறு வகை பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர கசவன், மலைவேடன் என்ற பழங்குடியினரும் நீலகிரி மாவட்டத்தின் சில ஊர்களில் வசித்து வருகின்றனர். ஒவ்வொரு பழங்குடி இனத்தாரும் வாழும் இடம், வாழ்வியல், மொழி, உடை போன்றவை வெவ்வேறு விதமாக உள்ளது. "நீலகிரியில் இனங்காணப்படும் மேற்சுட்டிய பண்டைய பழங்குடி குழுக்களுள் தொதவர் - 'மேய்ச்சல் பழங்குடி' யாகவும் (Pastoral Tribs); கோத்தர் - 'கைவினைத் திறனுடைய பழங்குடி' யாகவும் (Artisanal Tribe); மற்றும் உள்ள ஏனைய பழங்குடிக் குழுக்களான ஆலு குறுபர் (Alu kurumbas); பெட்ட குறுமர் (Betta kurumbas); முள்ளு குறுமர் (Mullu kurumbas); இருளர். பணியர் மற்றும் காட்டுநாயக்கர் - 'உணவு தேடிப் பழங்குடிக் குழுக்களா'கவும் (Food gathering Tribal groups) விளங்குகின்றன"(முனைவர் சி மகேசுவரன், பண்பாட்டு ஆய்வியல், ப.178).

**இருளர் இனமக்கள்**

இருளர் இனமக்கள் இந்தியாவின் தெற்குப் பகுதியில் தமிழ்நாடு, கேரளா, மற்றும் கர்நாடக மாநிலங்களில் காணப்படுகின்றனர். கர்நாடக மாநிலத்தில் இவர்கள் 'இரளிகர்' என்று அழைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் இருளர்கள் காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய 11 மாவட்டங்களில் பரவிக் காணப்படுகின்றனர்.

தமிழகம் முழுவதும் பரவி உள்ள இருளர்களின் இனக்குழுப் பெயர்கள் ஒரே சீராக வழங்கப்படுவதில்லை. தமிழக இருளர் பழங்குடியினரின் இனக்குழுப் பெயர்கள் இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சான்றாக, மலைவாழ் இருளருள் கோவை இருளர் 'வெட்டக்காட்டு இருளப் பள்ளர்' எனவும், நீலகிரியின் தெற்கு இருளர் 'முதுவர்' எனவும், வடக்கு இருளர் 'கசபர்' எனவும் அழைக்கப்படுகின்றனர். சமவெளி இருளர்கள் 'வில்லி' 'வில்லியன்' 'காட்டுப் பூசாரி' எனப் பலவாறாகவும் குறிப்பிடப்படுகின்றனர்.

**தொழில்கள் மற்றும் வாழ்வாதாரம்**

ஒரு சமூகத்தின் வாழ்வியல் அமைப்பை முழுமையாகப் புரிந்துகொள்வதில் அதன் பாரம்பரியத் தொழில்களும், வாழ்வாதார முறைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிப்பாகப் பழங்குடியின மக்களின் தொழில்கள், அவர்கள் வாழும் இயற்கைச் சூழல், பண்பாடு, மரபுசார் அறிவு மற்றும் சமூகத் தேவைகளுடன் நெருங்கிய தொடர்புடையவையாக அமைந்துள்ளன. இயற்கை வளங்களை அளவோடு பயன்படுத்தி, சுற்றுச் சூழலுடன் இணக்கமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதே அவர்களின் வாழ்வாதாரத்தின் சிறப்பம்சமாகும்.

நீலகிரி இருளர் இன மக்கள் பாரம்பரியமாகக் காடு, வனவிலங்குகள் மற்றும் வனவளங்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். காடுகளில் கிடைக்கும் பொருட்களைச் சேகரித்தல், மூலிகை மருத்துவம், வேளாண்மை மற்றும் கால்நடைப் பராமரிப்பு போன்றவை அவர்களின் முக்கிய வாழ்வாதாரத் தொழில்களாக விளங்குகின்றன. "முற்றிலும் காட்டுவாசிகளான இவர்கள் மூலிகை, வேர்கள், மணம் தரும் மலர்கள், கிழங்குகள், தேன், தேன்மெழுகு மற்றும் உபரியான விளைச்சல் பொருள்களை விற்றுத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார்கள்"(க. குணசேகரன், இருளர்கள் ஓர் அறிமுகம், ப. 79). ஆனால் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், வேட்டையாடுதல் மற்றும் சில வனவளங்களைப் பயன்படுத்துவதில் சட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக இவர்களின் பாரம்பரியத் தொழில்கள் மற்றும் வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் இவர்கள் அருகிலுள்ள தேயிலை மற்றும் காபித் தோட்டங்களில் கூலித் தொழிலாளிகளாகவும், அரசு வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்ற மாற்று வாழ்வாதாரங்களை நோக்கிச் செல்ல வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

**உணவுப் பழக்கவழக்கங்கள்**

நீலகிரிப் பகுதியில் வாழும் இருளர் இனமக்களின் உணவு முறைகள் காடு மற்றும்

இயற்கை வளங்களை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. காடுகளில் கிடைக்கும் கீரைகள், பழங்கள், சிறுதானியங்கள், தேன் ஆகியவை இவர்களின் அன்றாட உணவின் முக்கிய அங்கங்களாக விளங்குகின்றன. சில நேரங்களில் மதிய உணவாகப் பலாப் பழங்களை விரும்பி உண்கின்றனர். பலாச் சுளையுடன் தேன் கலந்து உண்ணுகின்றனர். மூங்கில் குருத்தினைத் தண்ணீரில் வேகவைத்து உண்ணுகின்றனர். ரேயா என்று அழைக்கப்படும் வெற்றிலைக் கிழங்கினை ஆவியில் வேகவைத்து உண்ணுகின்றனர். சீயக்காய் (தலைக்குப் பயன்படுத்தும் சீயக்காய் அன்று இது வேறு வகை) இந்தச் சீயக்காயின் செடியில் காய் வருவதில்லை. இந்தச் சீயக்காய் கீரையினை வேகவைத்து உண்ணுகின்றனர். இறைச்சி வகை உணவுகள், காய்கறிகள், காடுகளில் கிடைக்கும் பழங்கள், கிழங்குகள், கீரை வகைகள், மூங்கில் விதை, திணை வகைகளான கம்பு, ராகி போன்றவைகளை உணவாக உட்கொள்கின்றனர். மக்காச் சோளத்தினை ஊர வைத்து, இடித்து, உணவு சமைக்கின்றனர். மேற்கூறப்பட்ட உணவு வகைகள் இன்று அருகி வருகின்றன. "இருளர்கள் பஞ்ச காலத்தில் இலை தலைகள், புற்றுமண், சரளைக் கற்கள் போன்றவற்றை உண்டு வாழ்ந்ததாகக் கூறுகின்றனர்"(முனைவர் த. விஜயலட்சுமி, இருளர் பழங்குடிகளின் மருத்துவம், ப.19).

நவீனமயமாக்கல், நகரமயமாக்கல், கல்வி வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகளின் விரிவாக்கம் ஆகியவை காலப்போக்கில் இவ்வுணவு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தற்கால இருளர் இனமக்கள் இன்று சந்தையில் எளிதில் கிடைக்கும் அரிசி, கோதுமை, எண்ணெய், சர்க்கரை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

**குடியிருப்பு**

மனிதனின் அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுபவை உணவு, உடை, இருப்பிடம் ஆகும். சங்க இலக்கியங்கள் ஐந்து நிலங்களைக் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) கொண்டு வாழ்க்கையை வருணிக்கின்றன. ஒவ்வொரு நிலத்தின் இயற்கைச் சூழலே அங்குள்ள குடியிருப்புகளின் வடிவமைப்பையும் தீர்மானித்தது. இதில் குறிஞ்சி நில மக்கள் கற்குடிசைகள், குகை வீடுகள், மரத்தாலான குடிசைகள் போன்றவைகளில் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

நீலகிரிப் பகுதியில் வாழும் இருளர் இனமக்கள், புல்லினால் வேயப்பட்ட மூங்கில் குச்சிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்ந்து வந்துள்ளனர். தற்பொழுது ஓட்டு வீடு, கல் வீடு, சிறு மெத்தை வீடு, தகரத்தினை மேற்கூரையாகக் கொண்ட வீடு போன்ற வீடுகளிலும், தற்போது மத்திய அரசும், மாநில அரசும் வனத்துறையும் கட்டிக் கொடுத்துள்ள தொகுப்பு வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். எல்லா வீடுகளும் ஒரே இடத்தில் காணப்படுவதில்லை. இம்மக்கள் தங்களுடைய சொந்த நிலங்களில் வீடுகள் கட்டிக்கொள்கின்றனர். அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் மட்டுமே வரிசையாக அமைந்துள்ளன. நீலகிரி இருளர் இன மக்களின் பாரம்பரியக் குடியிருப்புகள் இயற்கையுடன் இயைந்த எளிய அமைப்பைக் கொண்டிருந்தது. மேற்கூறிய குடியிருப்புகளின் அமைப்பு முறை பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து நவீன வாழ்க்கை முறையை நோக்கிய அவர்களின் சமூக மாற்றத்தை வெளிப்படுத்துகின்றது.

**உடைகள்**

மனித வாழ்வில் உடைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. உடை மனிதனின் பண்பாடு, சமூக நிலை, காலநிலை, தொழில், அழகியல் உணர்வு ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளமாகும். சங்க இலக்கியங்களில் ஆணும் பெண்ணும் அணிந்திருந்த உடைகள், அவர்களின் சமூகச்சூழல் மற்றும் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்துகின்றன. "அறம், பொருள், இன்பம்" ஆகியவற்றைப் போற்றிய தமிழர்கள் உடையையும் பண்பாட்டின் ஒரு கூறாகக் கருதி வாழ்ந்து வந்தனர். எனவே உடைகள் என்பது உடல் பாதுகாப்புக்காக மட்டுமல்லாமல், சமூக அடையாளத்தையும், பண்பாட்டுச் செழுமையையும் வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

அவ்வகையில் பார்க்கும் பொழுது நீலகிரி இருளர் இனமக்களில் ஆண்கள் தலைக்குத் தலைப்பாகை அணிந்து வந்துள்ளனர் என்று கூறுகின்றனர். இதனை "எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் இருளர்கள். அதனால் தான் பெரியவர்கள் தலைப்பாகையாகத் துணிகளைக் கட்டிக்கொள்கின்றார்கள்" (ப.73) என்ற க.குணசேகரன் கூற்றின் மூலம் அறியலாம்.

தற்பொழுது இவ்வழக்கம் இவர்களிடையே காணப்படுவதில்லை. திருமணத்தின் போது மட்டுமே தலைப்பாகை அணிகின்றார்கள். தற்கால ஆண்கள் வேட்டி,சட்டை அணிகின்றனர். இளைய தலைமுறையினர் முழுக்கால் சட்டை அணிகின்றனர்.

பெண்கள் மார்பிலிருந்து கணுக்கால் வரை தொங்கும் வெள்ளை நிறத் துணியினை அணிந்து, தோல் பட்டையிலிருந்து மார்பு வரை வெள்ளை நிறத் துண்டினால் போர்த்திக் கொள்கின்றனர். இவ்வுடையினைத் திருவிழாக் காலங்களில் வயது முதிர்ந்த பெண்கள் அணிவதைக் காண முடிகிறது. நடுத்தர வயதுதுடைய பெண்கள் தமிழர்களைப் போன்றே சேலையினை அணிகின்றனர். சிறிய பெண் குழந்தைகள் பாவாடை, சட்டை, சுடிதார் போன்ற துணிகளையே அணிகின்றனர். நீலகிரி இருளர் இன மக்களின் உடையில் ஏற்பட்ட மாற்றங்கள், அவர்களின் வாழ்வியலில் நிகழ்ந்த சமூக மற்றும் பண்பாட்டு மாற்றங்களின் வெளிப்பாடாகக் காணமுடிகிறது. இம்மாற்றம் அவர்களின் சமூக முன்னேற்றத்தையும் காலத்திற்கேற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் திறனையும் வெளிப்படுத்தினாலும், பாரம்பரிய உடையின் பயன்பாடும், பண்பாட்டு அடையாளமும் படிப்படியாகக் குறைந்து வருவதையும் அறிய முடிகிறது.

**மரபுவழி மருத்துவ அறிவும் மூலிகை மருத்துவமும்**

ஒவ்வொரு மனித சமுதாயமும் தங்களுடைய நிலவியல் சூழல்களுக்கு ஏற்றாற்போல் தங்களுக்கெனத் ஒரு தனித்த மருத்துவ முறைகளைக் கொண்டுள்ளனர்.

*“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*

*வாய்நாடி வாய்ப்பச் செயல்” (திருக்குறள் - 948)*

என்று வள்ளுவர் கூறியதுபோல், மனித வாழ்வில் நோயும், அதன் நிவாரணமும் அன்றாட வாழ்வியலின் அங்கமாகவே இருந்து வருகின்றன. தொன்மைத் தமிழ் இலக்கியங்கள் நோய்களையும், மருந்துகளையும், வைத்திய முறைகளையும் பல இடங்களில் சுட்டிக்காட்டுகின்றன. அகநானூறு, புறநானூறு, திருக்குறள் ஆகியவற்றில் மூலிகைகளின் குணங்கள் குறித்த குறிப்புகள் காணப்படுவது, தமிழரின் பண்டைய வைத்திய அறிவின் செழுமையை உணர்த்துகின்றன. இத்தகைய பண்பாட்டு அறிவை இன்றளவும் தம் வாழ்வியலின் ஓர் அங்கமாகக் கொண்டிருப்பவர்கள் பழங்குடிகள்.

பழங்குடியின மக்களின் வாழ்வியலில் மரபுவழி மருத்துவ அறிவு முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த அனுபவத்தின் அடிப்படையில் உருவான இவ்வறிவு, தலைமுறை தலைமுறையாக வாய்மொழி மரபின் வழியாகக் கடத்தப்பட்டு வருகின்றது. காடுகள், மலைகள் மற்றும் இயற்கை வளங்களுடன் நெருங்கிய தொடர்பில் வாழ்ந்த பழங்குடியினர், பல்வேறு மூலிகைத் தாவரங்களின் மருத்துவப் பயன்களை அறிந்து, அவற்றை நோய்களைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் திறம்படப் பயன்படுத்தியுள்ளனர்.

நீலகிரி இருளர் இனமக்களின் மருத்துவ அறிவு, அவர்களின் பாரம்பரிய அறிவுச் செல்வத்தின் முக்கிய அங்கமாகும். காடுகளில் வளரும் மூலிகைத் தாவரங்களை அடையாளம் கண்டு, அவற்றின் இலை, வேர், பட்டை, காய் மற்றும் விதைகளைப் பயன்படுத்தி பல்வேறு நோய்களுக்கு மருந்து தயாரிக்கும் திறன் அவர்களிடம் காணப்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டது. இருப்பினும், நவீன மருத்துவத்தின் வளர்ச்சி, வாழ்க்கை முறை மாற்றங்கள், காடுகளின் சுருக்கம் மற்றும் இளைய தலைமுறையினரிடையே மரபுசார் அறிவு பரிமாற்றம் குறைவடைதல் போன்ற காரணங்களால் இம்மூலிகை மருத்துவ முறை படிப்படியாக மறையும் நிலையில் உள்ளதும் கண்டு உணரப்பட்டது.

**தொகுப்புரை**

- நீலகிரி மலைவாழ் இருளர் இனமக்களின் வாழ்வியல் இயற்கையைச் சார்ந்ததாக அமைந்திருந்தாலும், தற்பொழுது நகரமயமாக்கல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், சமூகப் பொருளாதர மாற்றங்களினால் இவர்களின் வாழ்வில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது.
- நீலகிரி இருளர் இன மக்கள் பாரம்பரியமாகக் காடு, வனவிலங்குகள் மற்றும் வனவளங்களைச் சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர், வேட்டையாடுதல் மற்றும் சில வனவளங்களைப் பயன்படுத்துவதில் சட்டக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இதன் காரணமாக இவர்களின் பாரம்பரியத் தொழில்கள் மற்றும்

வாழ்வாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது.

- நவீனமயமாக்கல், கல்வி வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வசதிகளின் விரிவாக்கம் ஆகியவை காலப்போக்கில் இருளர் இனமக்களின் உணவு முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தற்கால இருளர் இன மக்கள் இன்று சந்தையில் எளிதில் கிடைக்கும் உணவுப் பொருட்களை அதிகளவில் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.
- இருளர் இனமக்களின் உடைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இவர்களின் சமூக முன்னேற்றத்தையும், காலத்திற்கேற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் திறனையும் வெளிப்படுத்தினாலும், பாரம்பரிய உடையின் பயன்பாடும், பண்பாட்டு அடையாளமும் படிப்படியாகக் குறைந்து வருவதையும் ஆய்வில் அறிய முடிந்தது.
- இருளர் இனமக்களின் மருத்துவ முறை, நவீன மருத்துவத்தின் வளர்ச்சி, வாழ்க்கை முறை மாற்றங்கள், காடுகளின் சுருக்கம் மற்றும் இளைய தலைமுறையினரிடையே மரபுசார் அறிவுப் பரிமாற்றம் குறைவடைதல் போன்ற காரணங்களால் படிப்படியாக மறையும் நிலையில் உள்ளதை அறிய முடிகிறது

**துணைநூற் பட்டியல்**


- குணசேகரன், க., இருளர்கள் ஓர் அறிமுகம், கிழக்கு பதிப்பகம், சென்னை - 600014, 2008
- குணசேகரன், கே.ஏ., நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989
- தமிழ்நாடான்(தொகுப்பாசிரியர்), தமிழ்நாட்டு மலைவாழ் பழங்குடி மக்கள், சேலம் மாவட்ட ஓவியர் எழுத்தாளர் மன்றம், சேலம், 1996
- பரமசிவன், தொ., பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிமிடெட், நாகர்கோவில், 2021
- மகேசுவரன், முனைவர் சி., பண்பாட்டு ஆய்வியல், பாரதி புத்தகாலயம், சென்னை - 600018, 2023
- வானமாமலை, நா. (பதிப்பாசிரியர்), மக்களும் மரபுகளும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.1993
- விஜயலட்சுமி, முனைவர்.த., இருளர் பழங்குடிகளின் மருத்துவம், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2021


*****